**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No.132/2022**
**Prosecution Witness**:7

| Name | திரு.முருகன் (PW7 ) | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | | Calling | |
| Village | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 17th **day of March 2026** by V.Nivedha Assistant, District Munsif Cum Judicial Magistrate Court, Kodumudi by following the direction of Officer of this Court.

*(Accused present.)*

**முதல் விசாரணை:–**

நான் தற்போது ஈரோடு மாவட்டம் மாவட்ட குற்ற பதிவேடு கூடத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 14.02.2021ம் தேதி நான் கொடுமுடி வட்ட காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது சிவகிரி காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் K.கணேசன் என்பவர் 14.02.2021ம் தேதியன்று இரவு 00.30 மணிக்கு திருப்பூர் மாவட்டம், தாராபுரம், சங்கரண்டாம்பாளையம் ரத்தினமூர்த்தி கோவிலை சேர்ந்த செந்தில்குமார் மகன் நவீன்குமார் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரின் பேரில் பதிவு செய்த சிவகிரி காவல் நிலைய குற்ற எண்.42/2021 ச/பி.279, 337 இதச வழக்கில் காயம்பட்ட நபர் நந்தகுமார் அதிகாலை 01.15 மணிக்கு கோவை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார் என்ற தகவலை பெற்ற சிவகிரி காவல்நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.கணேசன் அவர்கள் வழக்கின் சட்டப்பிரிவுகளை 279, 337 இதச விலிருந்து 279, 304(A) இதசவாக சட்டப்பிரிவு மாறுதல் செய்து மேல் விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்த வழக்கு கோப்பினை நான் எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன்.

2. வழக்கை எனது புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு 14.02.2021ம் தேதி காலை 06.30 மணிக்கு இவ்வழக்கின் சம்பவ இடமான முத்தூர் – ஈரோடு ரோடு ஒத்தப்பனை, தங்கவேல் ஆசாரியார் வீட்டிற்கு அருகில் சென்று சாட்சிகள் குப்புசாமி மற்றும் நல்லசிவம் ஆகியோர்கள் சம்பவ இடத்தை அடையாளம் காண்பிக்க அவர்கள்

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.17 15:11:37 +0530

முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேலும் சம்பவ இடத்தில் வைத்து சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகள் அப்புக்குட்டி, சக்திவேல், பழனிச்சாமி, மற்றும் பார்வைமகஜர் சாட்சிகளான குப்புசாமி மற்றும் நல்லசிவம் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். பின்னர் அங்கிருந்து புறப்பட்டு கோவை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சென்று அங்கு சவக்கிடங்கில் வைக்கப்பட்டிருந்த இவ்வழக்கின் இறந்துபோன நந்தகுமார் என்பவரின் பிரேதத்தின் மீது காலை 11.00 மணி முதல் 14.00 மணி வரை பஞ்சாயத்தார்கள் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் பிரேதத்தை பார்வையிட்டு பிரேத விசாரணை செய்து பிரேத விசாரணை அறிக்கை ஒன்று தயார் செய்தேன். **பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. இறந்துபோன நந்தகுமார் என்பவரின் இறப்பிற்கான மருத்துவ ரீதியான காரணம் அறியும் பொருட்டு அவரது பிரேதத்தை சடலக்கூராய்வுக்காக கோவை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை அலுவல் மருத்துவருக்கு தலைமைகாவலர் 1250 மணி என்பவர் மூலம் வேண்டுகோள் கடிதத்துடன் அனுப்பி வைத்தேன்.

3. பின்னர் சாட்சிகள் நவீன்குமார், பன்னீர்செல்வம், மூர்த்தி, நித்யா, கோகிலாம்பாள், செந்தில்குமார் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 16.02.2021ம் தேதி வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு காலை 10.00 மணிக்கு சிவகிரி காவல்நிலையம்ஆஜரான இவ்வழக்கின் எதிரி சக்திவேல் என்பவரை கைது செய்து திரேக பரிசோதனை செய்து தக்க பிணையில் விடுவித்தேன். விபத்து ஏற்படுத்திய எதிரியின் வாகனமான TN 33 BL 2514 அசோக் லைலேண்டு டிப்பர் லாரியை வாகன தணிக்கைக்காக ஈரோடு கிழக்கு வட்டார போக்குவரத்து கழக மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதத்துடன் அனுப்பிவைத்தேன். 24.02.2021ம் தேதி விபத்தின் போது இறந்துபோன நந்தகுமார் ஓட்டிசென்ற வாகனமான TN 78 E 0763 பல்சர் இருசக்கர வாகனத்தை வாகன தணிக்கைக்காக ஈரோடு கிழக்கு வட்டார போக்குவரத்து கழக மோட்டார் வாகன

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.17 15:11:41 +0530

ஆய்வாளர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் மூலம் அனுப்பிவைத்தேன்.

4. 05.05.2021ம் தேதி வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு இவ்வழக்கில் இறந்துபோன நந்தகுமாருக்கு முதலுதவி சிகிச்சை அளித்த காங்கேயம்அரசு மருத்துவமனை உதவி மருத்துவர் சந்தோஷ்பாபு அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேட்டு நகல் பெற்றேன். **விபத்து பதிவேட்டு நகல் அ.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** அன்றைய தினமே இவ்வழக்கில் இறந்துபோன நந்தகுமார் என்பவரின் பிரேதத்தின் மீது பிரேத பரிசோதனை செய்த கோவை அரசு மருத்துவக்கல்லூரி சட்டம் சார்ந்த மருத்துவத்துறை உதவி பேராசிரியர் மருத்துவர் நிம்மி சிவக்குமார் அவர்களை விசாரித்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றேன். **பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.8 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. மருத்துவரின் இறுதி கருத்துரை அ.சா.ஆ.9 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** அன்றைய தினமே விபத்தில் சம்பந்தப்பட்ட எதிரியின் வாகனமான TN 33 BL 2514 அசோக் லைலேண்டு டிப்பர் லாரி மற்றும் இறந்துபோன நந்தகுமார் ஓட்டிசென்ற TN 78 E 0763 பல்சர் இருசக்கர வாகனம் ஆகியவற்றை வாகன தணிக்கை செய்த ஈரோடு கிழக்கு வட்டார போக்குவரத்து அலுவலக மோட்டார் வாகன ஆய்வாளர் கதிர்வேல் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் பெற்றேன். அந்த **மோட்டார் வாகன ஆய்வறிக்கை (TN 33 BL 2514 அசோக் லைலேண்டு டிப்பர் லாரி) அ.சா.ஆ.10 ஆகவும், மோட்டார் வாகன ஆய்வறிக்கை (TN 78 E 0763 பல்சர் இருசக்கர வாகனம்) அ.சா.ஆ.11 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

5. அன்றைய தினமே பிரேத பரிசோதனை வழிக்காவல் தலைமைகாவலர் 1250 மணி மற்றும் இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிவகிரி காவல்நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளர் K.கணேசன் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 05.05.2021ம் தேதி இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து ஆஜர் எதிரி சக்திவேல் என்பவர் மீது ச/பி. 279, 304(A) இதசவின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். பிரேத பரிசோதனை அறிக்கை, இறுதி கருத்துரை, விபத்து பதிவேட்டு நகல், மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள்,

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.17 15:11:44 +0530

ஆகியவற்றை அரசு தரப்பு சான்றாவணமாக குறியீடு செய்யும் பொருட்டு அரசு தரப்பில் கு.வி.மு.ச.294(3) பிரிவின் படி மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சான்று ஆவணமாக குறியீடு செய்யப்பட்டது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–**

நான் சம்பவ இடத்திற்கு எப்போது சென்றேன் என்றால் 14.02.2021ம் தேதி காலை 06.30 மணிக்கு சென்றேன். புகாரை எப்போது வாங்கி வழக்கு கோப்பினை மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன் என்றால் 14.02.2021ம் தேதி அதிகாலை எடுத்துக்கொண்டேன். நான் புகார்தாரரை CMC மருத்துவமனையில் வைத்து 14.02.2021ம் தேதி விசாரித்தேனா என்றால் இல்லை. நான் சம்பவம் நடந்த உடன் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றால் சரிதான், வழக்கு கோப்பினை பெற்ற பிறகுதான் சம்பவ இடத்திற்கு சென்றேன். நான் சம்பவம் நடந்த உடனே சம்பவ இடம் சென்றதாகவும், அ.சா.2 மற்றும் அ.சா.3ஐ சம்பவ இடத்தில் வைத்து விசாரித்தேன் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு சென்றபோது விபத்தில் ஈடுபட்ட லாரி அங்கு இருந்ததா என்றால் இல்லை. சம்பவ இடத்தில் புகைப்படம் எடுத்தேனா என்றால் இல்லை. லாரி மற்றும் இருசக்கர வாகனத்தில் எந்த பகுதி சேதமாகியிருந்தது என்று புகைப்படம் எடுத்தேனா என்றால் இல்லை.

2. லாரியில் என்ன லோடு இருந்தது என்று தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. நான் காங்கேயம் மருத்துவமனை மருத்துவரை விசாரித்தேன் என்றால் சரிதான். லாரி மோதி விபத்து நடந்ததாக விபத்து பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருந்ததை தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன். நின்ற லாரியின் மீது இருசக்கர வாகனம் மோதியதாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, திடீரென்று லாரியை நிறுத்தியதால் விபத்து ஏற்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரி மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றாலும், அவை காவல்நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டவை என்றாலும் சரியல்ல. இவ்வழக்கின் சாட்சிகள் அனைவரும் வெளியூர் சாட்சிகள் என்றால் சரிதான். உள்ளூர் சாட்சிகளை

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.17 15:11:48 +0530

விசாரித்திருந்தால் உண்மையான நிலவரம் தெரிந்திருக்கும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN

Digitally signed by PANDIARAJAN
Date: 2026.03.17 15:11:52 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.